DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**STC.No.194/2022**

**2024-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 24- ம் நாள் வியாழக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 03 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.சரவணன் இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 03 | தொழில் | - | கடை வேலை |
| பெயர் | - | பிந்து | வட்டம் | - | வால்பாறை |
| க/பெ | - | அஜித்குமார் | சமயம் | - | |
| கிராமம் | - | கக்கன் காலனி | வயது | - | 47 |
| சாதி | - | | | | |

**<u>24.10.2024</u>**

**( எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பில் குவிமுச.பிரிவு 317-ன் கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.)**

<u>முதல் விசாரணை:</u>

1. நான் தற்போது கக்கன் காலனியில் குடியிருந்து கிருஷ்ணாஸ் ஜவுளிக்கடையில் வேலை செய்கிறேன். வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் சாட்சி சொல்ல வேண்டும் என்று அழைத்ததால் இன்று நீதிமன்றம் வந்துள்ளேன். போலீசார் விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரியதில் அனுமதி வழங்கப்பட்டு சாட்சி அரசு தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.)**

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:</u>

1. நான் குடியிருக்கும் பகுதியில் சிபு என்பவருக்கு சொந்தமான 4 மாடியில் 2-வது தளத்தில் அ.சா.1 குடியிருந்து வருவதாக அந்த வீட்டின் மொட்டை மாடியில் சிறுவர்கள் எப்போதும் விளையாடி அ.சா.1-க்கு மனஉளைச்சலை ஏற்படுத்தியதாகவும், அ.சா.1 பலமுறை அங்கு விளையாட வேண்டாம் என்று சொல்லியும் அவர்கள் கேட்கவில்லை என்றும் கடந்த 24.12.2020-ம் தேதி மாலை அ.சா.1 ஆனந்த் அவரது வீட்டில் வேலை செய்து கொண்டிருந்தபோது எங்கள் பகுதியை சேர்ந்த சிறுவர்கள் அவரது வேலைக்கு இடையூறாக விளையாடினார்கள் என்றும் அ.சா.1 அவர்களை விரட்டிவிட்டார் என்றும் அதற்கு அவர்கள் நாங்கள் அப்படிதான் விளையாடுவோம் என்று சொன்னார் என்றும் அன்று மாலை மேற்படி சிறுவர்கள் அவர்களது பெற்றோர்களை ஆனந்த் அடித்தாக கூறி அழைத்து வந்ததாகவும், வந்தவர்கள் பாரத் சேனா அமைப்பை சேர்ந்தவர்களையும் உடன் அழைத்து வந்தார்கள் என்றும் மாலை சுமார் 06.30 மணியளவில் அ.சா.1 நடந்த சூழ்நிலையை அவர்களிடம் பேசிக்கொண்டிருந்த போது பாரத்சேனாவை சேர்ந்த எதிரி அன்பழகன் அ.சா.1-ஐ பார்த்து நீ

என்னடா விளையாடுகிற பிள்ளைகளை விளையாட கூடாது என்று சொல்லுர தாயோழி என அறுவருப்பான வார்த்தைகளால் பேசி அ.சா.1-ன் கன்னத்தில் ஓங்கி அடித்ததாகவும், அ.சா.1-ம் மரியாதையாக பேசு என்று சொன்னதற்கு குழந்தைகள் அப்படித்தான் விளையாடுவாங்க தேவிடியா பயளே அதோடு உன்னை கொல்லுரேனா இல்லையா பாருடா என்று மிரட்டியதாகவும், அ.சா.1-க்கு கன்னத்தில் வலி இருந்ததால் வால்பாறை அரசு மருத்துவமனைக்கு சென்றதாகவும், அங்கிருந்து பொள்ளாச்சி GH-க்கு அனுப்பி வைத்தபோது இரவு நேரமாகிவிட்டதால் அ.சா.1 பொள்ளாச்சி GH-க்கு போகமால் வீட்டிற்கு வந்துவிட்டதாகவும், எதிரியின் செய்கையால் அ.சா.1-க்கு மிகவும் அவமானமாக இருந்ததாகவும், பயமாக இருந்ததால் எதிரி மீது நடவடிக்கை எடுக்க அ.சா.1 புகார் கொடுத்தாகவும், போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை** :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.

DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**
**STC.No.194/2022**
**2024-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 24- ம் நாள் வியாழக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 04 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.சரவணன் இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 04 | தொழில் | - | வீட்டுக்குடித்தனம் |
| பெயர் | - | கவிதா | வட்டம் | - | வால்பாறை |
| க/பெ | - | ரமேஷ் | சமயம் | - | |
| கிராமம் | - | கக்கன் காலனி | வயது | - | 37 |
| சாதி | - | | | | |

**24.10.2024**

**( எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பில் குவிமுச.பிரிவு 317-ன் கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது வால்பாறையில் உள்ள கக்கன் காலனியில் எனது குடும்பத்தோடு குடியிருந்து வருகிறேன். எதிரியையும், அ.சா.1-ம் எனக்கு தெரியும். அ.சா.2 மற்றும் அ.சா.3-ம் தெரியும். அ.சா.1 நான் இருக்கும் வீட்டில் தான் வாடகைக்கு இருக்கிறார். கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் நான் கடைக்கு போய்விட்டு வரும் போது எங்கள் வீட்டிற்கு தள்ளி கூட்டமாக இருந்தது. எனக்கு அன்றைய தினம் உடல்நிலை சரியில்லமால் இருந்ததால் நான் என்ன என்று எதுவும் கேட்டுக்கொள்ளவில்லை. அன்று என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. போலீசார் விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரியதில் அனுமதி வழங்கப்பட்டு சாட்சி அரசு தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.)**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:**

1. நான் குடியிருக்கும் பகுதியில் சிபு என்பவருக்கு சொந்தமான 4 மாடியில் 2-வது தளத்தில் அ.சா.1 குடியிருந்து வருவதாக அந்த வீட்டின் மொட்டை மாடியில் சிறுவர்கள் எப்போதும் விளையாடி அ.சா.1-க்கு மனஉளைச்சலை ஏற்படுத்தியதாகவும், அ.சா.1 பலமுறை அங்கு விளையாட வேண்டாம் என்று சொல்லியும் அவர்கள் கேட்கவில்லை என்றும் கடந்த 24.12.2020-ம் தேதி மாலை அ.சா.1 ஆனந்த் அவரது வீட்டில் வேலை செய்து கொண்டிருந்தபோது எங்கள் பகுதியை சேர்ந்த சிறுவர்கள் அவரது வேலைக்கு இடையூறாக விளையாடினார்கள் என்றும் அ.சா.1 அவர்களை விரட்டிவிட்டார் என்றும் அதற்கு அவர்கள் நாங்கள் அப்படிதான் விளையாடுவோம் என்று சொன்னார் என்றும் அன்று மாலை மேற்படி சிறுவர்கள் அவர்களது பெற்றோர்களை ஆனந்த் அடித்தாக கூறி அழைத்து

வந்ததாகவும், வந்தவர்கள் பாரத் சேனா அமைப்பை சேர்ந்தவர்களையும் உடன் அழைத்து வந்தார்கள் என்றும் மாலை சுமார் 06.30 மணியளவில் அ.சா.1 நடந்த சூழ்நிலையை அவர்களிடம் பேசிக்கொண்டிருந்த போது பாரத்சேனாவை சேர்ந்த எதிரி அன்பழகன் அ.சா.1-ஐ பார்த்து நீ என்னடா விளையாடுகிற பிள்ளைகளை விளையாட கூடாது என்று சொல்லுர தாயோழி என அறுவருப்பான வார்த்தைகளால் பேசி அ.சா.1-ன் கன்னத்தில் ஓங்கி அடித்ததாகவும், அ.சா.1-ம் மரியாதையாக பேசு என்று சொன்னதற்கு குழந்தைகள் அப்படித்தான் விளையாடுவாங்க தேவிடியா பயளே அதோடு உன்னை கொல்லுரேனா இல்லையா பாருடா என்று மிரட்டியதாகவும், அ.சா.1-க்கு கன்னத்தில் வலி இருந்ததால் வால்பாறை அரசு மருத்துவமனைக்கு சென்றதாகவும், அங்கிருந்து பொள்ளாச்சி GH-க்கு அனுப்பி வைத்தபோது இரவு நேரமாகிவிட்டதால் அ.சா.1 பொள்ளாச்சி GH-க்கு போகமால் வீட்டிற்கு வந்துவிட்டதாகவும், எதிரியின் செய்கையால் அ.சா.1-க்கு மிகவும் அவமானமாக இருந்ததாகவும், பயமாக இருந்ததால் எதிரி மீது நடவடிக்கை எடுக்க அ.சா.1 புகார் கொடுத்தாகவும், போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை** :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.